1981 ஆகஸ்ட் 29]

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, தனி ஆணையர் நியமிக்கப்பட்டும் கூட அவர்களுக்கு உதவியாக டைபிஸ்ட், க்ளார்க் போன்ற பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் பணி முடக்கம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப்பட்ட பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அத்தகையப் பணியாளர்கள் ஏற்கெனவே வட்டாட்சி, கோட்டாட்சி. மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களில் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னிறைவுத் திட்டம் செயல்படும்ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்; வரவேற்கிறேன். அதே நேரத்தில் அந்த ஆணையருக்கும் ஏற்கெனவே இருக்கும் ஆணையருக்கும் அந்த வட்டாரத்தைச் சுற்றிப்பார்க்க ஒரு ஜீப்தான் இருக்கிறது. அந்த ஜீப்புக்கு கூடுதல் பெட்ரோல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாமல் அந்த ஜீப் ஓட்டுநர் இரவு பகலாக ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான பெட்ரோல் வழங்குவதோடு, கூடுதலாக ஒரு ஓட்டுநரும் நியமிக்கப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)

ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை உருளைகள் வாங்கும் திட்டம்.

*வினா எண் 134— திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒவ்வொரு 'ரோட் ரோலர்' பொது நிதியிலிருந்து வாங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நெடுஞ்சாலைப் பிரிவின் எந்த ஊராட்சி ஒன்றியத்தில் உபரிப் பொதுநிதியாக மூன்று இலட்சத்திற்குமேல் மிக அதிகமாக இருப்பு உள்ளதோ அந்த ஒரு ஊராட்சி ஒன்றியம் சாலை உருளை வாங்கிக்கொள்ளலாம் என்றும் மற்ற ஒன்றியங்கள் வாடகை செலுத்தி அதைப் பயன்படுத்தலாம் என்ற ஆணை இருக்கிறது.

திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, பொது நிதி குறைவாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுத்து பிறகு பெற்றுக்கொள்கின்ற வகையிலே உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே எந்தெந்த ஒன்றியங்களிலே பொது நிதி உபரியாக இருக்கின்றதோ அவற்றுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலும் 50 உருளைகள் வாங்குவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதற்காக 1,12,50,009 ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கின்றது. அந்த உருளைகள் எல்லாம் பெறப்பட்டு வருகின்றன. ஆனால் எவ்வளவுதான் சீக்கிரமாக உருளைகளைப் பெற வேண்டும் என்றாலும் அவற்றை உற்பத்தி செய்கின்ற கம்பெனிகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நமக்கு கொடுக் கின்றன, ஆகவே உடனடியாக 100 உருளைகள் தேவை என்று நாம் சொன்னால் அவர்களால் கொடுக்க முடிவதில்லை. ஆகவே வருகின்ற கால கட்டங்களில் கண்டிப்பாக இவைகளில் எல்லாம் தன்னிறைவை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை அரசாங்கம் கவனித்து வருகின்றது.

திரு. ஆனூர் பு.கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, ரோட் ரோலரின் விலை எந்த அளவுக்கு வருகின்றது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒரு ரோலரின் விலை 2 இலட்சத்திலே இருந்து 3 இலட்சம் வரை வருகின்றது.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவு திட்டம் செயல்படுத்துகின்ற வகை யிலே ஓர் ஆண்டு காலத்திற்குள் சாலைகளை எல்லாம் முடிக்க வேண்டும் என்று அரசு சொல்லி இருக்கின்றது. ஆனால் ஒருசில இடங்களிலே ரோட் ரோலர் இல்லாததால் வேலைகள் தாமதப் படுகின்றன. ஆகவே அதுபோன்ற இடங்களில் தற்காலிகமாக உடனடியாக ரோட் ரோலர் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சாலைப்பணிகளைப் பொறுத்தவரையில் அவற்றை எல்லாம் முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஊரக வளர்ச்சித் துறையினால் மட்டுமல்லாமல்' நெடுஞ்சாலைத் துறையின் மூல மாகவும் 50 உருளைகள் பெறப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் வைத்து, என்னென்ன திட்டங்களைத் தீட்டி இருக் கிறோமோ அவற்றை எல்லாம் கண்டிப்பாக செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து 5 ரோட் ரோலர்களை தஞ்சை மாவட்டத் திலே வாங்கி இருக்கிறார்கள். அனால் இவற்றை வாங்குகின்ற போது முறையாக பத்திரிகைகளில் கொட்டேஷன் கேட்கப்பட வில்லை என்று கூறப்படுகின்றது. அது உண்மையா? மேலும் அதிக விலை கொடுத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். அது உண்மையா?

1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இவைகள் எல்லாம் ரேட் கான்ட்ராக்ட் முறையிலே வாங்கப்பட்டிருக்கின்றது. கிரிவ்ஸ் காட்டன் என்ற கம்பெனியிலே இருந்து ரேட் கான்ட்ராக்ட் மூலம் சாலை உருளைகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரோட் ரோலர் வாங்கப்படும் என்று சொன்னார்கள். பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்ற டிராக்டர்கள் எந்தவிதப் பயனும் இல்லாத நிலையிலே வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவற்றை விற்றுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு ரோட் ரோலர் வாங்கி உதவி செய்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இருக்கின்ற டிராக்டர்கள் எல்லாம் என்ன நிலையிலே இருக்கும் என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதும் தெரியும். கண்டிப்பாக, அவற்றை விற்றால் ஒரு ரோட் ரோலரைக் கூட நல்ல நிலையிலே இயங்குகின்ற வகையிலே வாங்க முடியாது.

ஆனால் இதுபோன்ற பழைய டிராக்டர்களை எல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

***வினா எண். 135 திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பெருந்துறை ஒன்றியத்தில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவலை போய்விட்டது என்றால் தலை போய் விட்டது என்று சொல்வார்கள். அதேபோன்று பெருந்துறை ஒன்றியத்திலே விஜயமங்கலம் என்ற இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா என்பது கேள்வி. அந்த வகையிலே பெருந்துறை ஒன்றியத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயறகுறிப்பு உள்ளதா என்று இருக்கின்றது. ஆனால் ஏற்கெனவே பெருந்துறை ஒன்றியத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, ஆகவே ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற காரணத்தாலேயும்